National University of Singapore

**Source:** *Tamil Murasu,* p3
**Date:** 6 April 2019

# முன்னாள் மாணவர்கள் ஐவருக்கு என்யுஎஸ் விருது

சிங்கப்பூர் தேசிய பல்கலைக் கழகம் (என்யுஎஸ்) தனது தலை சிறந்த முன்னாள் மாணவர்கள் ஐவரின் பங்களிப்புகளைக் கௌரவித்துள்ளது. குறிப்பாக, நாட்டு நிர்மாணம் மற்றும் கலை, சமூக அறிவியல் துறைக்கு அவர்கள் அளித்துள்ள பங்களிப் புக்காக விருது வழங்கிக் கௌர விக்கப்பட்டனர்.

என்யுஎசின் சமூகப் பணித் துறையின் கல்வியாளரான திருமதி ஆன் எலிசபெத் வீ, முன்னாள் நாடாளுமன்ற உறுப் பினரும் இலங்கைக்கான சிங்கப்பூர் தூதருமான திரு எஸ். சந்திரதாஸ் (படம்), தூதர் பேரி டெஸ்கர், முன்னாள் துணைப் பிரதமர் வோங் கான் செங், ஐக்கிய நாட்டு அகதிகள் அமைப் பின் முன்னாள் உதவித் தூத ரான திருமதி ஜெனட் லிம் ஆகி யோர் நேற்று விருது வழங்கிக் கௌரவிக்கப்பட்டனர்.

அப்போதைய சிங்கப்பூர் பல்கலைக்கழகத்தில் 1965ஆம் ஆண்டு பொருளியல் துறையில் இளங்கலைக் கல்வியில் ஹானர்ஸ் பட்டம் பெற்ற திரு சந்திரதாஸ், பல்வேறு துறைகளில் 40 ஆண்டு களுக்கும் மேல் அனுபவம் உடை யவர்.



இவற்றில் குறிப்பிடும்படியாக, 1993லிருந்து 2005 வரை என்டி யுசி ஃபேர்பிரைசின் தலைவராக இவர் பொறுப்பு வகித்தார்.

1980ல் நாடாளுமன்ற உறுப் பினராகத் தேர்ந்தெடுக்கப்பட்ட திரு சந்திரதாஸ், நான்கு தவ ணைகளுக்குப் பிறகு 1996ல் அப்பதவியிலிருந்து ஓய்வு பெற்றார்.

Source: Tamil Murasu © Singapore Press Holdings Ltd. Permission required for reproduction.